**நுவரெலியா பிரதேச சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நுவரெலியா பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பிரதேச சபை மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கை

பிரதேச சபை மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய முறையே ரூபா 7,491,257 தொகை மற்றும் ரூபா 12,533,371 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 5,017,545 தொகை மற்றும் ரூபா 5,617,956 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 9,389,127 இனால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முறையே ரூபா 2,502,749 தொகை மற்றும் ரூபா 9,862,546 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன ரூபா 8,344,596 மற்றும் ரூபா

3,351,049 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 669,650 கூட்டுத்தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வேலைக் கடன்பட்டோராக நடைமுறைச் சொத்துக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 49,242,233 தொகையில் சபை நிதியத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட வேலைகளில் ரூபா 12,329,969 மதிப்பீட்டுப் பெறுமதி உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைக் கடன்பட்டோரும் மூலதனச் செலவினமும் அதே அளவில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கில் ரூபா 4,667,795 தொகையான மீதி ரூபா 4,657,795 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 10,000 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்ளூராட்சி கணக்கு முறைமையின் படி ஒவ்வொரு செலவின விடயங்களிலும் ஒவ்வொரு வருமான விடயங்களிலும் கொடுப்பனவு மற்றும் பெறுவனவு பொழிப்பு மீதிகளிலிருந்து பெற்று கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் காசேட்டுடன் வரவு மற்றும் செலவாக பிழையான பதிவுகளை இட்டு 32 நாட்குறிப்புகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டில் பொதுக் காசுக் கணக்கில் வேலைக் காசுக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 5,412,723 தொகை தீர்க்கப்படாத முற்பணமாக பதியப்பட்டிருந்ததுடன் அதனை சரி செய்யும் போது உரிய செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டு முற்பணக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் பிழையாக காசுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு முற்பணக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் மீளச் செலுத்த வேண்டிய ரூபா 2,719,406 தொகையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 8,198,656 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 5,479,250 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சபையில் பேணப்படுகின்ற 05 உபயோகப் பதிவேடுகளின் மீதிகளுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளை ஒப்பீடு செய்த போது ரூபா 15,896,661 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 தொங்கல் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 69,944,595 ஆக இருந்தது.

### 1.3.6 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,954,452 ஆக இருந்ததுடன் அதில் 01 வருட காலத்தை விஞ்சிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 644,216 ஆக இருந்தது.

### 1.3.7 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,569,477 ஆக இருந்தது.

### 1.3.8 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**(அ)** தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 106,167,586 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமான 33 காணிக் கூறுகள் வெளித்தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 15 கூறுகளுக்குரிய குத்தகை உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 61,005 பெறுமதியான 49 காற்சட்டைகள் மற்றும் ரூபா 7,470 பெறுமதியான 06 மழை அங்கிகள் விநியோகித்தல் தொடர்பான எந்தச் சான்றும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5 ஆவது விதி | சாந்திபுர பார்வையாளர் மேடை அமைந்துள்ள காணி 24.19 பேர்ச் 08 வருட காலத்தில் வெளிநபர்களினால் பயன்படுத்தப்பட்டு கொண்டிருந்தது. |
| (அ) மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 ஏப்ரல் 05 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | தமது அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனமொன்று அல்லது மோட்டார் சைக்கிள் அல்லது முச்சக்கர வண்டியற்ற 10 மக்கள் பிரதி நிதிகளுக்கு மீளாய்வாண்டின் போது எரிபெருள் படியாக ரூபா 250,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 189, 486 மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 31 | 06 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 17,543 கூட்டுப்பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 | 45 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 4,657,794 கூட்டுத்தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,136,840 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,072,463 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 5,935,623 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் 20 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் 04 செலவின விடயங்களில் செலவினம் 16 சதவீதத்திற்கும் 60 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| I. | வீதவரியும் வரியும் | 7,990 | 3,024 | 4,966 |
| II. | வாடகை | 4,523 | 3,480 | 1,043 |
| III. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,514 | 3,514 | - |
| IV. | ஏனைய வருமானம் | 2,400 | 2,108 | 292 |

### 2.3.2 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான கடைகளுக்காக வருமானப் பரிசோதகரின் மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 30 மற்றும் ரூபா 50 ஆன ஆகக் குறைந்த மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது. கொட்டகல சந்தைத் தொகுதி, ரொசிட்டா நாளாந்த சந்தை மற்றும் ரொசிட்டா நவீன கடைகளுக்காக 1987 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகை அறவிடப்பட்டமையினால் சபைக்குக் கிடைக்க வேண்டிய பாரியளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 காணிக் குத்தகை

சபைக்குச் சொந்தமான 33 காணிக் கூறுகளுக்காக 17 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு குத்தகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மத்திய மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றின் பெறுமதி ரூபா 12,364,797 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய லிதுல பாமஸ்டன் காணியை ஏல விற்பனை செய்வதற்காக சபை காணியை கூறுகளாக்குதல் அங்கீகரிக்கப்பட்டு அபிவிருத்தி அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய காணிக்கூறை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறிக்கை மூலம் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் என்பவற்றை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

i. சபை அதிகாரப் பிரதேசத்தில் 05 மயான நிலங்களுக்காக மீளாய்வாண்டின் போது கம்பி வேலி போடுவதற்காக திட்டமிடலின்றி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 680,250 பெறுமதியான பொருட்களிடையே ரூபா 51,900 பெறுமதியான 48 சீமெந்து பக்கற்றுக்கள் மற்றும் ½ கியூப் மணல் என்பன 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் அழிவடைந்திருந்தமை 2014 மே 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

ii. சபை நிதியத்தின் மூலம் நாகசேன நூலகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,592,171 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2001 பெப்ரவரி 23 ஆந் திகதிய 352/10 ஆம் இலக்க மற்றும் 2002 மார்ச் 04 ஆந் திகதிய 252/19 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் மீறப்பட்டு அதிகாரப் பிரதேசத்தில் இரண்டு சங்கங்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்திற்குரிய 20 சதவீத

முற்பணமாக ரூபா 718,434 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி உரிய சங்கங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பரிசோதனைத் திகதி வரையிலும் முற்பணம் வழங்கி 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் எந்த நிர்மாணமும் மேற்கொள்ளப்படாதிருந்தமை 2014 மே 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

iii. சபை நிதியத்தின் மூலம் நாகசேன நூலகத்திற்காக ரூபா 28,951 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாயிற்கதவு 05 மாதங்களை விஞ்சுவதற்கு முன் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமையினால் கழற்றி அகற்றப்பட்டிருந்தது.

iv. கந்தபொல பொது மலசல கூடத்தின் பக்கச் சுவர் மற்றும் கிணறு நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 592,028 தொகை மற்றும் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,093,918 தொகையுமாக ரூபா 1,685,946 கூட்டுத்தொகைக்காக 02 சங்கங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா 500,000 தொகை 03 சந்தர்ப்பங்களின் போது 2 சங்கங்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாணத்திற்குரிய பக்கச் சுவர் உடைந்து வெடித்திருந்தமையினால் ஒட்டுமொத்த செயற்திட்டமும் தோல்வியடைதிருந்தமை 2014 மே 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.3 செயற்திட்டத்தை அமுலாக்குவதில் தாமதம்

பின்வரும் செயற்திட்டங்கள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை | உடன்படிக்கை கையொப்பமிட்ட திகதி | பூர்த்திசெய்ய வேண்டிய திகதி | ஆரம்பக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா |
| i. | பகவந்தலாவ முன்பள்ளி பாடசாலை அபிவிருத்தி | 184,558 | 30.12.2013 | 30.01.2014 | 50,000 |
| ii. | டயகம நகரத்தில் எல்லை வேலி நிர்மாணம் | 363,059 | 20.12.2013 | 20.02.2014 | 66,000 |
| iii. | கந்தபொல பொது மலசல கூடத்தின் பக்கச்சுவர் மற்றும் கிணறு நிர்மாணம் | 1,110,000 | 30.09.2013 | 30.11.2013 | 395,011 |
| iv. | நாகசேன நூலக நிர்மாணத்தின் முதல் கட்டம் | 1,975,059 | 20.12.2013 | 20.03.2014 | 395,011 |
| v. | நாகசேன நூலக நிர்மாணத்தின் இரண்டாம் கட்டம் | 1,950,005 | 30.12.2013 | 20.03.2014 | 323,422 |
| vi. | மதகு நிர்மாணம் - தலன்கந்த வத்த | 273,447 | 27.12.2013 | 27.01.2014 | 49,717 |
| vii. | பார்மஸ்டன் வத்த மதகு நிர்மாணம் | 25,000 | 19.06.2013 | 19.07.2013 | 12,500 |
| viii. | பெயார்வேல் வீதிக்கு கொங்கிரீட் இடல் | 99,727 | 26.11.2013 | 26.12.2013 | 19,945 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ix. | தர்மபால புர சந்தன மாவத்தை கொங்கிரீட் இடல் | 50,000 | 20.12.2013 | 20.12.2013 | 29,086 |
| x. | 6 ஆம் கட்டை கந்தபொல பஸ் நிலைய நிர்மாணம் | 95,000 | 06.12.2013 | 06.01.2013 | 20,000 |
| xi. | மெராயா நூலகக் கட்டிடத்தின் மதில்சுவர் மற்றும் காவலாணி அறை நிர்மாணம் | 205,210 | 08.11.2012 | 08.12.2012 | 41,042 |

### 3.4 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்றைப் பின்பற்றாதிருந்ததுடன், சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கழிவுப்பொருட்கள் கந்தபொல, றாகல வீதி, உடுபிஹில்ல, நானுஓயா மற்றும் கொட்டகலை தகனக் கூடம் போன்ற இடங்களில் போடப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 07 வருமான விடயங்களில் 05 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 03 சதவீதம் முதல் 238 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 தீர்வு காணப்படாத பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 18 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்